Scanned by CamScanner

கருத்துப் போட்டி எண்-26 முடிவு

"அழகி வீட்டுக் கொலை!" சித்திரக்கதை கருத்துப் போட்டியில் கலந்து கொண்டவர்களில், ஏ. விஜயன் (ஸ்ரீவில்லிபுத்தூர்), பி. செல்வராஜ்(மேட்டுப்பாளையம்),பாத்திமா பீபி(கீழக்கரை), ஆர். ஆனந்தகுமார் (கோவை–4), ப. கவீதா (சென்னை–78), இனியவன் எஸ். எம். சரவணன் (குருவரெட்டியூர்), எஸ். ஜெயா டெய்சி ராணி (லால்குடி), எஸ். தாவுத்ஹீசைன் (மதுரை–1), பி. நாகராஜன் (சென்னை–57), எஸ். நந்தகுமார் (அர. குள்ளம் பட்டி), ஆகியோர் சிறந்த கருத்துக்களை எழுதி அனுப்பி இருந்தார்கள்.

மிகச் சிறந்த கருத்தை எழுதி ரூ. 50 பரிசு பெறுபவர்:—

.பி. அம்மாபட்டி,
4/42 அக்ரகாரம்,
மணக்கால் போஸ்ட்.
லால்குடி தாலூகா; திருச்சி மாவட்டம்.

அவரது கருத்து வருமாறு: —

"ஒரு கொலை வழக்கில் விசாரணை நடத்தச் செல்லும் இன்ஸ்பெக்டர் ஆசாத், கொள்ளைக் கூட்டத்தினரிடம் சிக்கிக் கொள்கிறார். ஆனால் கொள்ளையர் தலைவன் மான் சிங் ஆசாத்திடம், "நான் நன்மை செய்தவர்களை மறக்க மாட்டேன். முன்பு தவறாக கொலைக் குற்றம் சாட்டப்பட்ட என்னை விடுவிக்க நீங்கள் முயற்சி செய்து என்னை மரண தண்டனையில் இருந்து தப்பச் செய்தீர்கள். அதனால் நீர் மரணத்தில் இருந்து தப்ப ஒரு சந்தர்ப்பம் கொடுக்கிறேன்!" என்று கூறி ஒரு நிபந்தனை பேரில் ஆசாத்தை தப்ப விடுகிறான். என்னைக் கவர்ந்த இடம் இதுவே.

எப்போதோ செய்த உதவியை மனதில் வைத்துக்கொண்டு மான் சிங் ஆசாத்தை தப்ப விடுவது, அவனது நன்றி மறவாத நல்ல குணத்தை, மனிதத் தன்மையைக் காட்டுகிறது. செய் நன்றி மறவாமை ஒரு சிறந்த குணம். அதை ஒரு கொள்ளையர் தலைவனிடம் காணும் பொது அது மேலும் சிறப்படைகிறது. நெருப்புக்குள்ளும் ஈரம் உண்டு என்பதற்கு அந்த இடம் ஒரு எடுத்துக்காட்டு

அசாத்திய துணிச்சலும், வீரமும் கொண்ட ஆசாத் எப்படியும் கொள்ளையர்களிடம் இருந்து தப்பி விடுவார் என்று நாம் எதிர் பார்க்கிறோம்.

ஆனால் கெடுவான் கேடு நினைப்பான்; கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே என்பதைப் போல கொள்ளையர் தலைவனுக்கும், அவன் கூட்டத்தாருக்கும் கேடு அவர்கள் செயல் வடிவில் [illegible] காரணமாக இருப்பதும் அந்த சந்தர்ப்பம்தான். இவற்றில் அது என் மனதைக் கவர்ந்தது."

ராணி காமிக்ஸ்—36
(மாதம் இருமுறை இதழ்)
டிசம்பர் 15—31
1985

VAY

ஓநாய்படை!

Scanned by CamScanner

ஜோசப், செவ்விந்தியர்களைக் கொண்ட ஒரு சிறிய படையை வைத்து இருந்தார். அதன் தளபதி வாஸ்கோ. வியாபாரம் மூலம் நிறைய பணம் திரட்டிய ஜோசப், பேராசை கொண்டு பல வழிகளில் செல்வம் திரட்ட முனைந்தார்.
லோபோ தங்க சுரங்கத்தை கண்டுபிடித்து இருந்தால், அது எனக்குச் சொந்தம். இந்தப் பகுதி நிலம் முழுவதும் எனக்கே சொந்தம்.
லோபோவை உயிரோடு இங்கே கொண்டு வருகிறேன்!
உடனே வாஸ்கோ தலைமையில் துப்பாக்கி வீரர்கள், அந்தக் கோட்டையில் இருந்து புறப்பட்டு சென்றார்கள்.
“லிட்டில் கிரீக்” என்ற குடி இருப்பில் உள்ள மக்கள் லோபோவுக்கு விசுவாசம் உள்ளவர்கள். லோபோவை நாம் பிடிக்கும்போது அவர்கள் தடுத்தால் அவர்களை தண்டிக்க வேண்டும்!

ஜோசப் சந்தையில் வியாபாரம் செய்ய வந்த செவ்விந்தியர்களிடம் ஜோசப் தற்பெருமையாக பேசினர்—
ஒருநாள், வெள்ளைக்காரர்கள், இந்தப் பகுதியை ஒரு மாநிலமாக அமைப்பார்கள். அப்போது நான் தான் கவர்னர். ஏன் என்றல் இங்கே பெரும்பகுதி நிலம் எனக்கே சொந்தம்.
மிசவுரி நதி உற்பத்தி ஆகும் நிலப்—-பரப்பு முழுவதையும் தன் ஆட்சிக்கு கீழ் கொண்டு வரவேண்டும் என்ற கனவுடன் அவர் செயல்பட்டு வந்தார்.
இந்தப் பகுதிக்கு நான் தலைவன் ஆகிவிட்டால், இது செவ்விந்தியர்களின் மாநிலம் ஆகிவிடும்.
பழங்குடிகளான செவ்விந்தியருக்கு இங்கே தனி மாநிலம் அமைக்கப்படும் என்றல் அதற்காக போர் புரியவும் தயார்!
ஜோசப் தனது கோட்டைக்கு வந்து தனது பெரிய ஆபீஸ் அறையில் அமர்ந்தார்.
அந்த லோபோ தங்க சுரங்கத்தை கண்டுபிடித்தது உண்மை என்றல், நான் மிகப்பெரிய பணக்காரன் ஆவேன்! ஒரு ராணுவத்தையே தயார் செய்வேன்!



Scanned by CamScanner

Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner


லோபோ எங்கே இருக்கிறார் என்பதை சொல்லும்வரை பணயக் கைதிகளாக "லிட்டில் கிரீக்" குடி இருப்பு மக்கள் அனைவரையும் வாஸ்கோ பிடித்துச் சென்றான்.
தனக்காக இந்த அப்பாவிகள் கஷ்டப்படுவதை லோபோ, சகிக்க மாட்டார்! சீக்கிரம் நம் முன் சரண் அடைவார்!

ஒரு பாறை அருகே மறைந்து இருந்த லோபோ, தன் குடி இருப்பு எரிவதை பார்த்து மனம் கசிந்தார்.
ஏய் ஜோசப்! என்னை பிடிக்க நீ செய்யும் உபாயம் பலிக்காது. ஒன்றும் அறியாத அப்பாவி மக்களை கஷ்டப்படுத்தும் உன்னை பழிவாங்காமல் விடமாட்டேன். கப்பல் வரட்டும்...!

எப்படியாவது, அந்த சுரங்கம் உள்ள நிலத்தை அரசாங்கத்தின் மூலம் தனக்கு உரிமைப் படுத்தி விட்டு, பிறகு ஜோசப் உடன் மோதுவது என்று லோபோ திட்டம் போட்டார்.
சில நாட்களில் கப்பல் வரும். அதில் ஏறி புனித லூயிஸ் என்ற இடம் போவேன். அங்கே அரசாங்க அதிகாரிகளிடம் பேசி நிலத்தை உரிமை படுத்துவேன். அதுவரை தலைமறைவுதான்.

டாக்டர் லோபோ புனித லூயில் போக எதிர்பார்த்த, அந்தக் கப்பல் வெகு தூரத்தில், மிசவுரி ஆற்றில் வந்துகொண்டு இருந்தது. வழியில், அது பல துறைமுகங்களில் சாமான்களை இறக்கும். கடைசியாக ஜோசப் துறைமுகம் வரும். பிறகு திரும்பும். அது திரும்பி போகும் போது ஏதாவது ஒரு துறையில் இருந்து ஏற லோபோ திட்டமிட்டார்.
POTOMAC
அந்த நீராவிக் கப்பலில் ஒற்றர் படை வீரர்கள் இருந்தனர். ஜோசப் பற்றி தகவல் கிடைத்ததால் உளவு அறிய அவர்கள் அனுப்பப்பட்டனர். அவர்களுக்கு தலைவர் டான்.
டான்! ஜோசப் துறைமுகத்தை அடைந்ததும் நமது திட்டம் என்ன?
முதலில் நமக்கு தேவையான உணவுப் பொருளை சேமிக்கணும். பிறகு அந்த பிரதேசத்தை சுற்றிப் பார்த்து நிலைமையை அறியணும்.
இவர்தான் டான். ஒற்றர் படை தலைவர். வீரத்தோடு விவேகமும் கொண்டவர். அஞ்சா நெஞ்சம் படைத்த டான் கூறினார்—
அந்த ஜோசப் என்ன செய்கிறார்? அவரது திட்டம் என்ன? பலம் என்ன என்று எல்லாம் தெரிந்துகொள்ளணும்!

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

டான் காலால் அந்த முரடனை உதைத்து கீழே விழச் செய்தார்.
முரடன், கீழே விழுந்ததும் துள்ளிக் குதித்து எழுந்தான். அவன் மீண்டும் தாக்குவதற்குள் டான் அவன் மீது ஒரு குத்து விட்டார்.
இதுதான் உனக்கு கடைசி!

Scanned by CamScanner

Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner

மறுநாள். கப்பல் ஒரு துறையில் நின்றது. சரக்குகள் இறக்கப்பட்டன. டான், தன் குதிரையுடன் வெளிப்பட்டார்.
குதிரையை கொஞ்சம் ஓட விடணும்! அதோடு அந்த துப்பாக்கிகள் இங்கே இறக்கப்படுகின்றனவா என்றும் பார்க்கணும்!
குதிரையை தடவிக் கொடுப்பது போல் டான் கப்பலை கண்காணித்தார்.
துப்பாக்கிகள் இங்கே இறக்கப்படவில்லை. எனவே அவை அடுத்த துறைமுகமான ஜோசப் கோட்டை போகின்றன. அவை ஜோசப்புக்குதான் போகும்!



Scanned by CamScanner

Scanned by CamScanner

குதிரை முன் ஒரு தகர டப்பாவை வீசிய சாம். அதை துப்பாக்கியால் சுட்டான்.
அந்த தகர டப்பாவை துப்பாக்கியால் சுட்டே பறக்கச் செய்கிறேன், பாருங்க!

துப்பாக்கி சத்தம் கேட்டும் தகர டப்பாவில் குண்டு பாயும் சத்தம் கேட்டும் குதிரை மிரண்டது.
ஏய்! எதற்காக என் குதிரை முன் இப்படி வம்பு செய்கிறாய்?
ஏன் மிஸ்டர் டான்? வம்புக்கு பதிலடி கொடுக்கப் போகிறீரா?

Scanned by CamScanner

ரவுடிகள் பல பேர் இருந்தாலும்
டான் சளைக்காமல் சுட்டார்.
அவன் குண்டுகள் தீர்ந்ததும் பாய்ந்து போய் பிடியுங்க! திருப்பி லோடு பண்ண விடாதீங்க!

அருகில் இருந்த ஓட்டலில் சாப்பிட்டுக்கொண்டு
இருந்த டானின் ஒற்றர் படை வீரர்கள்
துப்பாக்கி சத்தம் கேட்டு பாய்ந்தனர்.
ஏதோ சண்டை நடக்கிற மாதிரி இருக்கு! வாங்க! போய் பார்ப்போம்!

சண்டை நடக்கும் இடத்துக்கு வந்த வீரர்கள் திடுக்கிட்டனர்—
HARNESSING
ஏய்! அது நம்ப டான்! பயலுகளை பந்தாடுங்கடா! ஒருவனைக் கூட விடக்கூடாது!
சான்சி கேளிக்கை விடுதி
டானின் ஒற்றர் படையினர் ஆங்காங்கே மறைந்துகொண்டு, சாமின் ஆட்கள் மீது சரமாரியாக சுட்டனர்.
டான்! நாங்க வந்து விட்டோம்!
அந்த டானுக்கு உதவி செய்ய ஆட்கள் இருப்பதை மரியா சொல்லவே இல்லையே!



Scanned by CamScanner

Scanned by CamScanner

பிறகு டான், மரியா அருகே சென்று கூறினர்—
விடுதிக்கு உன் கூட்டாளி சாம் நஷ்டஈடு கொடுக்கணும்!
கப்பல் கேப்டன் சொன்னதுதான் சரி. இவனை ஜோசப்தான் கவனிக்க வேண்டும்!
டான் துப்பாக்கி கடத்தல் பற்றியே யோசித்துக்கொண்டு இருந்தார்—
துப்பாக்கியை கடத்தும் ஆள், மரியாவுடன் தொடர்பு உள்ளவனுக இருக்க வேண்டும். மரியாவும் ஜோசப் கோட்டைக்குத்தான் போகிருளா?
கடைசி துறையான ஜோசப் துறைமுகத்தில் கப்பல் நின்றது. அதில் இருந்து துப்பாக்கி உள்ள புல் கட்டுகள் இறக்கப்படுவதை டான் கவனித்தார்.
இத்தனை துப்பாக்கிகளும் ஜோசப்புக்குதான் போகின்றன. அதில் சந்தேகம் இல்லை!

கப்பலில் இருந்து இறங்கியதும், மரியா நேரே, ஜோசப் கோட்டைக்கு
விரைந்தாள். அங்கே அரச மிடுக்குடன் கம்பீரமாக இருந்த ஜோசப்பிடம்
டான் பற்றி கூறி, டானை தீர்த்துகட்டச் சொன்னாள்.
டானை இனி என்னிடம் விட்டுவிடு. அவனைப் பற்றிய கவலையை விடு. அவனுக்கு ஒரு பொறி வைக்கிறேன்.

கோட்டையாகவும், சந்தையாகவும் விளங்கி வந்த ஜோசப் கோட்டைக்கு
ஒற்றர் படை தலைவர் டான், என்ஜினீயர் லோபோவின் மனைவி மற்றும்
குழந்தைகளை அழைத்து வந்தார். அதை ஜோசப், மரியாவுடன்
ஒரு ஜன்னல் வழியாக பார்த்தார்.
மரியா! டான் அழைத்து வரும் அந்தப் பெண்ணும், குழந்தைகளும் யார்?
அவர்கள் கப்பல் பயணிகள். இங்கே லோபோ என்ற ஆளைத் தேடி வருகிறார்கள்! அவர் குடும்பத்தினர், அவர்கள்!

Scanned by CamScanner


அந்த நேரத்தில் ஜோசப் மனதில் ஒரு பயங்கர திட்டம் உதித்தது. ஆனால் அதை அவர் வெளியில் காட்டவில்லை.
அங்கே குதிரையில்தான் போக முடியும். உங்களுக்கு 3 குதிரைகள் தருகிறேன். ஆனால் அது ஆபத்தான காட்டுப் பகுதி!
நாளை காலை நான் வந்து இவர்களை அழைத்துச் செல்கிறேன்.
டான் போய்விட்டார். லோபோ மனைவியும் குழந்தைகளும் அங்கே தங்கினர்.
வாஸ்கோ! ஒரு திட்டம் வைத்து இருக்கிறேன். அருகில் வா. சொல்கிறேன்!
திட்டம் என்ன என்பதை வாஸ்கோ காதில் ஜோசப் கிசுகிசுத்தார்.
லோபோவை பார்க்க வந்துள்ள அவரது மனைவி மக்கள் "லிட்டில் கிரீக்" போனதும், மறைந்து இருக்கும் லோபோ வெளி வருவான். பிடித்துக்கொள்!
இந்த டான் தடுத்தால் அவனைக் கொன்றுவிட்டு அவர்களை இங்கே கொண்டு வா. சித்திரவதை செய்தால், லோபோ தங்கம் இருக்கும் இடத்தை சொல்லிவிடுவான்!

Scanned by CamScanner

மறுநாள் காலை, திருமதி லோபோவை டான் அழைத்து சென்றார்.
அம்மா! அந்தக் கோட்டையை விட்டு வந்ததில் எனக்கு மகிழ்ச்சி! அந்த கோட்டை தீயவர்களின் கூடாரம்!
ஜேனி பயப்படாதே! 2 நாள் பயணத்துக்குப் பின் நீ உன் தந்தையை பார்க்கலாம்!
அவர்களுக்கு பின்னால் தளபதி வாஸ்கோ ஒரு கொலைப் படையை அழைத்துக் கொண்டு, காட்டில் மறைந்து, டானை பின்தொடர்ந்தான்.
லோபோ, வெளிப்பட்டதும், டானை கொல்லணும். பிறகு, லோபோ அவரது மனைவி, குழந்தைகளை கோட்டைக்கு இழுத்துப் போகணும்!


அவர்கள் பயணம் மணிக் கணக்கில் நீண்டது. ஜோசப் பற்றி அறிந்து இருந்த ஒற்றர் படைத் தலைவர் மிகுந்த எச்சரிக்கையுடன் லோபோ குடும்பத்தை அழைத்துச் சென்றார்.
நான் யார் என்று ஜோசப்புக்கு தெரியும். இருந்தும், என்னிடம் ஏன் வந்து இருக்கிறீர்கள் என்று கேட்கவில்லை. எனவே ஜோசப் ஏதோ திட்டம் போடுகிறார்!
தன்னை ஜோசப் ஆட்கள் பின்தொடரலாம் என்று அனுமானித்த டான், மிகுந்த எச்சரிக்கை அடைந்தார்.
சமையலை முடியுங்க! நான் சுற்றும் முற்றும் நோட்டம் போட்டுவிட்டு வருகிறேன்!


கொஞ்ச தூரம் சென்றதும்
டான் புதற்களுக்குள்
மறைந்து கொண்டு வேவு
பார்த்தார். ஒற்றர்
வேலையில் கில்லாடியான
அவர் கண்கள் கூர்மை
அடைந்தன.
யாரோ
பின்தொடர்வதா
என் புலன்கள்
உணர்த்துகின்றன.
ஒவ்வொரு
அசைவையும்
கவனிக்கிறேன்!

5 நிமிடம் கழித்தது. திடீர் என்று ஒரு புதரில் பறவைகள்
கலைந்தன. அதைப் பார்த்து டான் சந்தேகம் கொண்டார்.
உம்...
அந்தப் புதரில்
யாரோ மறைந்து
இருக்கிறார்கள்?

வாஸ்கோவின் கொலைப் படையினருக்கு வேவு பார்த்துச் சொல்ல ஒரு செவ்விந்திய ஒற்றன் டானை பின்தொடர்ந்து முதலில் வந்துகொண்டு இருந்தான்.
ஏய்! சத்தம் போட்டால் உன் கழுத்தை நெரித்து கொன்று விடுவேன்.
ஆ!!

அவன் மீது ஏறி உட்கார்ந்துகொண்ட டான், அவனது கோடறியை எடுத்துக்கொண்டு அவனை மிரட்டினார்.
ஏ! பாம்புப் பயலே! உண்மையை சொல்! யார் நீ? ஏன் எங்களை பின் தொடர்கிறாய்?
ஆ! சொல்றேன்! சொல்றேன்!

அந்த செவ்விந்தியன் கூறியதில் இருந்து, ஜோசப்பின் சதி திட்டத்தையும், அவரது கொலைப் படையினர் தன்னை பின் தொடர்வதையும் டான் அறிந்தார்.
உன்னை இங்கேயே கொல்லணும். அல்லது என்னுடன் அழைத்துப் போகணும். உம்... நாயே நட!
அவர்கள் கொஞ்ச தூரம் போனதும், அந்தச் செவ்விந்தியன் திமிறிக்கொண்டு ஓட ஆரம்பித்தான். அவனை சுட்டால், துப்பாக்கி சத்தம் கேட்டு, எதிரிகள் சுதாரிப்பார்கள் என்பதால் டான், அவன் கோடறியை அவன் மீது வீசினார்.
முட்டாளே! எங்கே ஓடுகிறாய்? இனி உன்னை தூக்கிச் செல்வேன்!



Scanned by CamScanner

பயணம் தொடர்ந்தது. வேவு பார்க்க வந்த வீரன் இறந்து கிடப்பதைப் பார்த்து, வாஸ்கோ என்ன செய்வான் என்று எண்ணியபடியே டான் போய்க்கொண்டு இருந்தார்.
எனது கணவர் விட்டில் கிரீக் பகுதியில்தான் எங்காவது தலைமறைவா இருக்க வேண்டும். இல்லையா மிஸ்டர் டான்?
அப்படித்தான் இருக்க வேண்டும்! அதனால்தான் அவரைப் பிடிக்க ஜோசப் இப்படி தந்திரம் செய்கிறான். நீங்க பயப்பட வேண்டாம். இந்த பாம்புகளின் பல்லை பிடுங்கிவிடலாம்!

அன்று இரவு சாப்பாட்டுக்கு ஒரு இடத்தில் முகாம் அடித்தனர். பிறகு தீயை எரிய விட்டுவிட்டு, காட்டுக்குள் மறைந்தார்கள்.
நாம் இங்கேதான் இருப்பதாக அவர்கள் நினைக்க அந்த நெருப்பும், புகையும் வழி செய்யட்டும்!

Scanned by CamScanner

இரவில் டானும், திருமதி லோபோவும் சாப்பிடுவதற்காக தங்கிய முகாமுக்கு வாஸ்கோ வந்து ஏமாற்றம் அடைந்தான்.
இரவில் இங்கே தங்காமல் தொடர்ந்து போய் இருக்காங்க! வாங்க போவோம்!


லோபோவை காணததால், அவரது குடும்பத்தினரை ஒரு குகையில் டான் மறைத்து வைத்தார். பிறகு...
மிஸ்டர் லோபோ எங்கே மறைந்து இருக்கிறார் என்று பார்த்து வருகிறேன். நீங்க இங்கேயே மறைந்து இருங்க!

Scanned by CamScanner



Scanned by CamScanner

கொஞ்ச நேரம் கழித்தது. லோபோ குடும்பத்தினரை பின்தொடர்ந்த வாஸ்கோவும், அவனது கூலிப் படையினரும், லிட்டில் கிரீக் என்ற இடத்துக்கு வந்தனர். யாரையும் காணாமல் அவர்கள் திகைத்து நிற்கையில்—
அதோ பார்!
அதுதான் வோபோ! நேரே நம் கையில் வந்து சிக்கிக்கொண்டான்! பிடியுங்க!

உடனே ஜோசப்பின் கொலை படையினர், லோபோவை நோக்கி பாய்ந்தனர்.
வாஸ்கோ! மெதுவா வா! நான் ஓடிப் போய்விட மாட்டேன்!

Scanned by CamScanner

Scanned by CamScanner


ஆனால் வாஸ்கோ மட்டும் எப்படியோ சமாளித்து தப்பி ஓடினான். ஆனால் டான் அவனை விடவில்லை!
லோபோ! கடைசி ஆள் வாஸ்கோ. அவனும் குளோஸ்!
எந்த குடி இருப்பு பகுதியை வாஸ்கோ தீ வைத்து எரித்தானோ அதே இடத்தில் அவன் பரிதாபமாக செத்தான்.

வேறு யாராவது உயிரோடு இருக்கிறார்களா என்று லோபோவும், டானும் பார்த்தனர்.
லோபோ, வாங்க! இனி உங்க குடும்பத்தினரை பார்ப்போம். இந்த கோரக் காட்சியை பார்த்தால் அவர்களது மென்மையான உள்ளம் தாங்காது!

Scanned by CamScanner

டான், தன் குதிரையை கோட்டைக்கு வெளியே கட்டிவிட்டு, கோட்டைக்குள் நுழைந்தார். ஜோசப்பின் அராஜக திட்டங்களை டான் நேருக்கு நேர் கண்டுகொண்டார். எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்க முடிவு செய்தார்.
எல்லோரும் தூங்குறாங்க முதலில் நண்பர்களை எழுப்பி விஷயத்தை சொல்லணும்!
வீரர்கள் இருந்த இடத்துக்குள் டான் நுழைந்தார். அங்கே எல்லோரும் விழித்துக்கொண்டு இருந்தார்கள்!
நண்பர்களே, துப்பாக்கி சண்டைக்கு தயார் ஆகுங்க. நான் ஜோசப்பை சந்திக்கப் போகிறேன். உம்! புலியென புறப்படுங்கள்!

Scanned by CamScanner

டான் கூறியதைப் பார்த்து மூவரும் அதிர்ச்சி அடைந்தனர். கோபம் கொண்ட மரியா, பையில் கைவிட்டு துப்பாக்கியை எடுத்தாள்.
ஜோசப்! லோபோவின் தங்க கண்டுபிடிப்பை உன்னால் அடைய முடியாது. இந்த பகுதியை நீ அரசாளவும் முடியாது! உன்னை புனித லூயிஸ் கொண்டு போகப் போகிறேன். அங்கே உன் மீது விசாரணை!
மரியா, வேண்டாம்!
கப்பல் கேப்டன் கூறியதையும் கேட்காமல், மரியா டானை சுட்டாள். ஆனால் கேப்டனோ—
டான்! விலகி கொள்ளுங்க!


மரியா சுட்டதும்,
ஜோசப் ஓடிப்போய்
மறைந்து கொண்டார்.
அதே நேரம் தரையை
நோக்கி குனிந்து
தப்பிய டான்,
மரியாவிடம்
பாய்ந்தாா.
என் கையை விடு! அந்த டானை சுட்டு வீழ்த்துகிறேன்!
முட்டாள்தனமா பேசாதே! தூக்கு கயிற்றில் தொங்க உனக்கு ஆசையா?

துப்பாக்கியை காப்பாற்ற
மரியாவுக்கும்,
கேப்டனுக்கும் நடந்த
போராட்டத்தில், திடீர்
என்று துப்பாக்கி
வெடித்தது. பாய்ந்த
குண்டு, மரியா
நெஞ்சை பதம்
பார்த்தது.
அவள்
சரிந்தாள்.
மரியா!

Scanned by CamScanner

Scanned by CamScanner

சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருந்த லிட்டில் கிரீக் மக்கள். பாய்ந்து வெளி — ஏறினார்கள்.
கரு மருந்து அறை.
பக்க வாசல் வழியா போய் காட்டுக்குள் புகுந்து தயாரா இருக்கும் கப்பலில் போய் ஏறிக் கொள்ளுங்க குயிக்!
கரு மருந்து சேமித்து வைக்கப்பட்டு இருந்த அறைக்கு டான் விரைந்தார்!
ஜோசப், அவரது குண்டர் படை, அவரது கொடுங்கோல் கோட்டை அனைத்தையும் தூளாக்கி விடுகிறேன்!





Scanned by CamScanner

Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner



ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: எஸ்.ராமஜெயம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. அச்சிட்டவர்: சி.கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

Scanned by CamScanner

15. இணைந்த கரங்கள்!

பாதை நெடுகிலும் தண்ணீர் கொட்டிக் கிடந்தது. "சர் சர்" என்று தண்ணீரை விசிறி அடித்துக்கொண்டு ஜீப் முன்னேறியது.

அதோ வந்துவிட்டது. கொலைப் பாறை.

அதையொட்டி உள்ள வில்வ மரம்.

ஜீப்பை நிறுத்தும்படி மனோஜ் கூறினான்.

வஜ்ரவேலை கீழே இறக்கினார்கள். அவனது உறுமலும், திமிரலும் நின்றபாடில்லை. மனோஜ் உடும்புப் பிடியாக அவன் தலை மயிரை பிடித்துக்கொண்டிருந்தான்.

பிறகு மனோஜ் திலகாவிடம், "திலகா! நீங்களும் அப்பாவும் பங்களாவுக்குப் போய்விடுங்கள். வயசுப் பொண்ணு இங்கிருப்பது நல்லதல்ல" என்றான்.

திலகா ஜீப்பை திருப்பினாள்.

உடனே மனோஜ், "மணி, முனியாண்டி இருவர் தவிர எல்லோரும் போய்விடுங்க!" என்றான்.

உடனடியாக ஜீப்பில் இருந்த பொருட்கள் இறக்கப்பட்டன. திலகா, விசுவநாதம், மேஸ்திரி பெரியசாமி, கணக்குப்பிள்ளை சதாசிவம் ஆகியோருடன் ஜீப், பங்களாவை நோக்கிப் புறப்பட்டது.

வஜ்ரவேலுவை வில்வ மரத்தை நோக்கி இழுத்துச் சென்றார்கள்.

ஒரு கையை டிரைவர் மணியும், இன்னோர் கையை முனியாண்டியும் "சிக்"கென்று பிடித்துக்கொண்டார்கள். மனோஜ், உச்சந்தலை முடியை பிடித்த பிடி விடவே இல்லை. அந்தப் பிடியைத் தளர்த்தினால் ஆபத்து என்பதை மனோஜ் மட்டும் அல்ல மற்ற இருவரும் புரிந்து இருந்தனர்.

ஒரு வழியாக வஜ்ரவேலை வில்வ மரத்தின் அருகே கொண்டு வந்தனர். அவனை மூன்று முறை வில்வ மரத்தைச் சுற்றி வரும்படி இழுத்து வந்தார்கள்.

மூன்றாவது தடவை முடிந்ததும், அவன் கண் மண் தெரியாமல் திமிறினான். ஆ, ஊ என்று கூச்சல் போட்டான். அவன் கண்கள் கொலை வெறியை உமிழ்ந்தன. அவன் முகம், அஸ்ட கோணலாக விகாரப்பட்டது. உடல் முழுவதும் முறுக்கிக் கொண்டு வியர்வையால் தெப்பல் ஆனது.

அவனது இரண்டு கைகளையும் மரத்தின் பின்னால் இழுத்துப் பிடித்துக்கொண்டு அவனைத் திமிற விடாமல் செய்தனர்.

மனோஜ் தன்னிடம் இருந்த வெள்ளைக் கைக்குட்டையை, ஒரு பொம்மையாக செய்தான்.

பிறகு வஜ்ரவேல் உச்சி முடியை பலங்கொண்ட மட்டும் பிய்த்து இழுத்தான். ஒரு கற்றை முடி அவன் கையில் வந்தது.

Scanned by CamScanner

மனோஜ், வஜ்ரவேல் தலையில் ஒரு எலுமிச்சம் பழத்தை வைத்து இரண்டாக வெட்டினான். ஒரு துண்டை அவன் தலையைச் சுற்றி வலப்புறம் வீசினான். இன்னோர் துண்டை தலையைச் சுற்றி இடப்புறம் வீசினான்.

இன்னோர் எலுமிச்சம்பழத்தை வெட்டி அவன் காலடியில் போட்டான்.

பிறகு அவன் தலையில் பிடிங்கிய மயிர்களை ஒரு எலுமிச்சம் பழத் துண்டில் வைத்து, நெருப்பு பெட்டியால் கொளுத்தி எரிய விட்டான். மயிர்கள் புஸ் புஸ் என்று எரிந்தன.

கொஞ்சம் சாம்பல் கிடைத்தது.

அதை எலுமிச்சம் பழத் துண்டில் வைத்து தேய்த்தான்.

கையில் மை போல் அது ஒட்டிக்கொண்டது.

அதால் துணி பொம்மைக்கு ஒரு பொட்டு வைத்தான்.

பிறகு வஜ்ரவேலுவின் உச்சி முடியை மூன்று முடிச்சு போட்டு அதை வில்வ மரத்தில் வைத்து அதன் மீது அந்த பொம்மையை வைத்து ஆணி அறைந்தான்.

கண் விழிகள் மேலே செறுக வஜ்ரவேலு விழித்த விழி மூடாமல் அப்படியே நின்றான். இப்போது அவனிடம் ஆட்டம் இல்லை. ஆர்ப்பாட்டம் இல்லை.

மந்திரத்துக்கு கட்டுப்பட்டவன் போல் அசையாமல் நின்றான்.

மனோஜ் அவசரம் அவசரமாக இன்னொரு எலுமிச்சம் பழத்தை இரண்டாக வெட்டி, இரண்டு துண்டுகளையும் குங்குமத்தில் துவைத்து எடுத்தான்.

பிறகு மணியிடமும், முனியாண்டி இடமும் "உம் போங்கள்!" என்பதற்கு அடையாளமாக தலையை அசைத்தான்.

இருவரும் திரும்பிப் பார்க்காமல் புறப்பட்டார்கள்.

மனோஜ் வில்வ மரத்தின் பின்னால் வந்தான். இரண்டு கையிலும் இரண்டு எலுமிச்சம் பழங்களை வைத்துக்கொண்டு இரண்டு கைகளையும் ஒருசேர நீட்டி கண்களை மூடிக்கொண்டான்.

ஏதோ மந்திரங்களை முணுமுணுப்பது போல் உதடுகள் அசைந்தன.

பிறகு எலுமிச்சம்பழத் துண்டுகளை பின்புறமாக வீசிவிட்டு, திரும்பிப் பாராமல் நடந்தான்.

பின்னால், மரம் ஒடிந்து விழுவது போல் "பொத்"தென்று சத்தம்—

திடீர் என்று காற்று வீசியது போல் வில்வ மரக் கிளைகள் ஆடின—

கழுத்து நெரிபடுவது போல் ஒரு விசித்திர ஒலி—

மனோஜ் திரும்பிப் பாராமல் மணி, முனியாண்டி ஆகியோருடன் போய் சேர்ந்துகொண்டான்.

Scanned by CamScanner

Scanned by CamScanner

அந்த நள்ளிரவில், நடுங்கும் குளிரில் மூவரும் பங்களாவை நோக்கி வேகவேகமாக நடந்தனர்.

மவுனத்தைக் கலைக்க மணிதான் முதலில் பேசினான்.

"சார்! வஜ்ரவேல் என்ன ஆவான்?"

"வஜ்ரவேல் மயங்கி கீழே விழுந்து இருப்பான். அவனைப் பிடித்துக்கொண்டிருந்த பாண்டியனின் ஆவி, வஜ்ரவேல் உயிருடன் ஒடுங்கிவிடும்."

"சார்! வஜ்ரவேல் செத்துவிடுவானா?" அதிர்ந்துபோய் கேட்டான், முனியாண்டி.

"ஆமாம். வஜ்ரவேல் இறந்துவிடுவான். இந்த மாதிரி கடுமையான நாட்களில் பேயை விரட்டும்போது, அது ஒரு உயிருடன்தான் போகும். தவிர, பாண்டியனின் ஆவி, ரொம்பவும் துடுக்கானது. அது நிச்சயம் ஒரு உயிருடன்தான் அடங்கும். பாண்டியனின் ஆவிக்கு கடைசி பலி வஜ்ரவேல்!

மீண்டும் அமைதி.

மூவரும் நடந்தார்கள்.

திடீர் என்று—

மனோஜ் நின்றான். "மணி! அதோ பார் ஒரு உருவம் வருகிறது!"

மணி, முனியாண்டி இருவரும் அதைப் பார்த்து திகைத்தனர்.

மணியிடம் இருந்து மனோஜ் துப்பாக்கியை வாங்கிக்கொண்டான்.

அந்த உருவத்தை நோக்கி மனோஜ் ஓடினான்.

மணியும், முனியாண்டியும் பின்தொடர்ந்தனர்.

அவர்களைப் பார்த்தோ என்னவோ, அந்த உருவம் தேயிலை செடிக்குள் மறைந்து ஓடியது.

மனோஜ் ஒரு தடவை துப்பாக்கியால் சுட்டான்.

அப்படியும் பயப்படாமல் அந்த உருவம் ஓடியது.

சளைக்காமல் மூன்று பேர்களும் அந்த உருவத்தை துரத்தினார்கள்.

"மணி! இப்படித்தான் இன்று இரவு நான் ஆஸ்பத்திரியில் இருந்து திரும்பும்போது, தலையில் கறுப்பு போர்வை முக்காடுடன் ஒரு உருவம் ஓடியது!" என்றான்.

அப்போது முனியாண்டி, "மன்னித்துவிடுங்க சார்! நான்தான் ரெண்டு பாட்டில் சாராயம் வாங்கிக்கொண்டு வந்தேன். நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை. பயந்து போய் ஓடி குறுக்கு வழியாக பங்களா போய்விட்டேன்!" என்றான்.

"அடப்பாவி! நீயா அது? ஏன் அப்படி செய்தாய்?"

"கையில் சாராய பாட்டில் இருந்ததால்..."

"சரி! சரி!"

மூவரும் தொடர்ந்து ஓடினார்கள்.

கடைசியில் [illegible] உருவம் பிடிபட்டது.

அதன் முகத்தைப் பார்த்தால்— அது முத்தம்மாள்!

"முத்தம்மா நீயா?"—மனோஜ்.

அவள் அலக்க மலக்க விழித்தாள்.

"முத்தம்மா! நீ எப்படி இங்கே வந்தாய்? ஆஸ்பத்திரியில் அல்லவா இருந்தாய்?"

முத்தம்மாள் விசும்பி, விசும்பி அழுதாள்.

அவளை மனோஜ் தேற்றினான். "முத்தம்மா! அழாதே. நடந்ததைச் சொல்!"

"நான் என்னதைச் சொல்வது. எல்லாம்தான் முடிந்துவிட்டதே!"—முத்தம்மாள் மீண்டும் கேவினாள்.

அவள் கொஞ்ச நேரம் அழட்டும் என்று மனோஜ் அவகாசம் கொடுத்தது சரியாக இருந்தது.

ஒருவாறாக அழுகையை அடக்கிய முத்தம்மா, "அப்பா என்ன ஆனார்கள்?" என்று கேட்டாள்.

"முத்தம்மா, உனக்கு எல்லாம் தெரியுமா?"

"தெரியும்!"

மனோஜ் கொஞ்ச நேரம் மவுனமாக இருந்தான். பிறகு, "முத்தம்மா, உன் தகப்பனாரை பாண்டியன் ஆவி பற்றிக்கொண்டது எப்படித் தெரியும்?"

"இரவு நேரம் ஆனதும் அப்பாவின் நடவடிக்கைகள் வித்தியாசமாக இருக்கும். நிறைய சாப்பிடுவார். நிறைய தண்ணீர் குடிப்பார். விகாரமாக சிரிப்பார். அவர் பங்களாவில் இரவில் காவலாளியாக இருந்தபோதுதான் ஆவி பிடித்திருக்க வேண்டும். சின்ன முதலாளி சபாபதி கொலை செய்யப்பட்டது, மூன்றுவதாக வந்த மானேஜர் கொலை செய்யப்பட்டது, 6—வது மானேஜர் மின்சார விசிறியில் தொங்கியது எல்லாம் பாண்டியன் ஆவி உந்துதலின் பேரில் அப்பா செய்த காரியங்கள்தான். பகலில் அந்த ஆவி நேரடியாக மற்ற மானேஜர்களை இம்சை படுத்தி உள்ளது. அதில் அவர்கள் எச்சரிக்கை அடைந்து ஓடாவிட்டால், ஆவி பலி கொண்டு இருக்கிறது!"

முத்தம்மாள் தொடர்ந்தாள்—

"அதனால்தான் நீங்க இங்கே வேலைக்கு வந்தபோது, எனக்கு பயமாகிவிட்டது. அப்பாவால் உங்களுக்கோ, உங்களால் அப்பாவுக்கோ ஒன்றும் நேரக்கூடாது என்பதற்காகவே, எஸ்டேட் பங்களாவில் நீங்க தங்க வேண்டாம் என்று கூறினேன். நீங்க கேட்கவில்லை. உங்களுக்கு ஏதாவது நடக்கும் என்று தினம் தினம் எதிர்பார்த்தேன். குறிப்பாக 3—வது நாளில். ஆனா நீங்க புத்திசாலித்தனமா தப்பித்துக்கொண்டே வந்துவிட்டீர்கள்.

"அப்பா பற்றி எனக்கே வேதனையாக இருந்தது. இரவு பகல் செத்து செத்து பிழைத்தேன். இந்த ஜீவமரணப் போராட்டத்துக்கு முடிவுகட்டத்தான் விஷம் குடித்தேன். விஷம் குடித்துவிட்டு, அப்பா பற்றி உங்களிடம் உண்மையைச் சொல்ல வரும்

வழியில் என்னை பார்த்து ஆஸ்பத்திரியில் சேர்த்து இருக்கிறீர்கள்."

"இன்று இரவு லேசாக நான் கண் அயர்ந்தபோது அப்பா ஆஸ்பத்திரியில் இருந்து புறப்பட்டு இருக்கிறார்கள். நான் கண் விழித்து பார்த்தபோது அவர்களைக் காணோம். இன்று அமாவாசை ஆச்சே, ஏதாவது ஆகிவிடக் கூடாதே என்று பதறி அடித்துக்கொண்டு வீட்டுக்குப் போனேன். அங்கே அப்பா இல்லை. மழை தூறியதால் இந்த போர்வையைத் தூக்கி போர்த்திக்கொண்டு எஸ்டேட்டுக்கு ஓடிவந்தேன். அதற்குள் என் அப்பாவைக் கொன்றுவிட்டீர்களே!" முத்தம்மா கதறிக் கொண்டு அழுதாள்.

பிறகு அவள் கொலைப் பாறை வில்வ மரம் நோக்கி ஓட எத்தனித்தாள்.

அவளை மணி பிடித்துக்கொண்டு, மார்பில் அணைத்து ஆசுவாசப் படுத்தினான்.

மனோஜ், அவள் அருகே வந்து நின்றுகொண்டு, "முத்தம்மா, அதைரியப்படாதே. உன் அப்பாவை யாரும் எதுவும் செய்துவிடவில்லை. அவர் விதி, பாண்டியன் ஆவி உருவில் வந்து, பல அக்கிரமங்களைச் செய்து, இப்போது அவர் உயிரையும் குடித்துவிட்டது. உன் துயரம் அளவிட முடியாததுதான். ஆனால் அழுது பயன் இல்லை. நிம்மதியாக இரு!"

"விடுங்கள்! நான் என் அப்பாவின் பிணத்தையாவது பார்க்க வேண்டும்!"

"முத்தம்மாள், சொல்வதைக் கேள். நீ இந்த நேரத்தில் அங்கே போக வேண்டாம். நாளை காலை உன்னை அங்கே அழைத்துச் செல்கிறோம்!"

முத்தம்மாள் குமுறினாள். "நான் அனாதை ஆகிவிட்டேனே!" என்று அரற்றினாள்.

அவள் தலையைக் கோதிக் கொடுத்த மனோஜ், "முத்தம்மா! நீ அனாதை இல்லை. நீ என் தங்கை. உன்னைத் தாங்கிப் பிடித்திருப்பது. உன் வருங்கால கணவன். ஆமாம், உனக்கும் மணிக்கும் திருமணம் செய்து வைக்கிறேன்!"

அதைக் கேட்டு ஆனந்தம் அடைந்த சமையல் முனியாண்டி முத்தம்மாளுக்கு ஆறுதல் கூறினான்.

பிறகு நான்கு பேர்களும் பங்களா நோக்கி புறப்பட்டனர்.

முத்தம்மாள் கைகளோடு கை கோர்த்தபடி, மணி நடந்தான்.

மனோஜை எதிர்பார்த்தபடி பங்களா வாசலில் திலகா நின்றிருந்தாள்.

அவள் கைகளுடன் தன் கைகளை இணைத்துக்கொண்ட மனோஜ், "எல்லாம் நல்லபடியாக முடிந்தது!" என்றான்!

அந்த அமாவாசை இரவு அமைதியாக விடியத் துடித்தது!

முற்றும்

Scanned by CamScanner

உங்கள் கருத்து

அழகி வீட்டுக் கொலை!

இன்ஸ்பெக்டர் ஆசாத் துப்பறியும் "அழகி வீட்டுக் கொலை" சித்திரக் கதையில், ஒவ்வொரு காட்சியும் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. —ஆர். விசாலாட்சி, எலத்துச் செட்டிபாளையம்.

சும்மா சொல்லக்கூடாது. அச(ா)த்திவிட்டார், ஆசாத்!

—என். சங்கர், சிங்காரப்பேட்டை.

இன்ஸ்பெக்டர் ஆசாத்துக்காக, நடன அழகி ஊர்மிளா தன்னைத் தியாகம் செய்வது நெஞ்சை உருக்கியது!

—எம். தனலட்சுமி, வாங்கல், கரூர் தாலுகா.

—வி. முபாரக், ஆத்தூர் (சேலம்)

—எஸ். லதாப் பிரியன், மணப்பாறை.

—ஏ. சுப்ரமணியன், கைக்கோளபாளையம்.

நல்ல மசாலாக் கதை!

—ஜி. மோகன் குமார், சிலைப்பிள்ளையார் புதூர்.

ஆசாத் செய்த உதவியை நினைத்து அவருக்கு தப்பிப் போக சந்தர்ப்பம் கொடுத்த மான்சிங், மறக்க முடியாத கொள்ளையன்!

—கே. கே. அய்யப்பன், பி. எஸ். மார்க்கெட், கோவை.

—சி. முனிசாமி, சென்னை–19.

"செத்துவிட்டான்!" என்று நினைத்திருந்த மான்சிங் மீண்டும் வந்தது பெரிய திருப்பம்!

—எஸ். லட்சுமணன், மதுரை–9.

—கோ. பூபாலன், அக்ராவரம் கிராமம், குடியாத்தம்.

—கே. பாண்டியன், தேவியாக்குறிச்சி.

எஸ்டேட் பேய்! (13 வது அத்தியாயம்)

"எஸ்டேட் பேய்" தொடர்கதையில் எஸ்டேட்டுக்குள் புகுந்த மர்ம உருவம் யார் என்பதை அறிய துடிக்கிறேன்.

—எஸ். ராஜலட்சுமி, சென்னை–94.

—வீ. முத்துவேல், குருவிக்கரம்பை.

விறுவிறுப்புக்கு இலக்கணம் வகுத்து ராக்கெட் வேகத்தில் போகிறது, எஸ்டேட் பேய்! —லாவண்யா, சேலம்.

முத்தம்மாள் ஏன் விஷம் குடித்தாள்? அவள் பிழைத்துக் கொள்வாளா என அறியத் துடிக்கிறேன்!

—டி. சி. சங்கர் திருப்பத்தூர்.

—டி. ஜி. கிருஷ்ணன், மதுக்கரை.

எஸ்டேட் அதிபர் விசுவநாதனுக்கு என்ன ஆபத்து வருமோ, என்ற பயத்தில் காத்திருக்கிறேன்!

—எம். பழனிக்குமார், சீலைனூர்.

—கே. சிவக்குமார், பெரியகுளம்.

Scanned by CamScanner

ரூ. 50-பரிசு: கருத்துப் போட்டி-28

"ஒற்றர் படை!" சித்திரக் கதையை படித்துவிட்டீர்கள் அல்லவா? இனி இந்தக் கதையில், உங்கள் மனதைக் கவர்ந்த சம்பவம் எது? அதற்கான காரணம் என்ன? என்று உங்கள் கருத்தை, "ராணி காமிக்ஸ்", ஒரு பக்க அளவுக்கு மிகாமல், எழுதி அனுப்புங்கள்.

மிகச் சிறந்த கருத்துக்கு ரூ. 50 பரிசு வழங்கப்படும்.

தேர்ந்து எடுக்கப்பட்ட கருத்து, 15–1–86 இதழில் பிரசுரிக்கப்படும்.

கருத்துப் போட்டி நிபந்தனைகள்:—

(1) கருத்துக்கள் எங்களுக்கு வந்து சேரவேண்டிய கடைசி தேதி 25–12–85. அதன்பின் வரும் கருத்துக்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

(2) போட்டியில் கலந்து கொள்பவர்களுக்கு வயது வரம்பு கிடையாது.

(3) போட்டியில், ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. சட்டப்படி கட்டுப்படுத்த முடியாது.

(4) கீழே உள்ள பாரத்தை பூர்த்தி செய்து, "கருத்து"டன் சேர்த்து அனுப்ப வேண்டும். அது இல்லாமல் வரும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

ராணி காமிக்ஸ்

கருத்துப் போட்டி எண்: 28

பெயர்: ....

முகவரி: ....

....

....

....

முகவரி:—
கருத்துப் போட்டி,
"ராணி காமிக்ஸ்",
1091, பெரியார்
நெடுஞ்சாலை,
சென்னை–600 007.

போட்டி நிபந்தனைகளுக்கு கட்டுப்படுகிறேன்.

....
(கையொப்பம்)

Scanned by CamScanner

ஓடும் முன்...

கீழே நாலு வரிசைகளில் படங்கள் வரையப்பட்டு உள்ளன. ஒவ்வொரு வரிசைப் படங்களிலும் ஒரு ஒவ்வாத (ஒத்துப் போகாத) படம் இடம்பெற்று உள்ளது. கண்டு பிடியுங்கள். (விடை: கீழே.)



விடை:

1. பேரிக்காய்
2. சந்திரன்
3. துடுப்பு
4. துப்பாக்கி

Scanned by CamScanner

RANI COMICS
(SEMI-FORTNIGHTLY)
Regd. No. TN/MS(N)/461

ராணி காமிக்ஸ்

அடுத்த இதழில்...!



சூப்பர் ஹீரோ டைகர்
தூள் பறத்தும்,



மீன் படை!

முழுநீள சித்திரக் கதை!

சித்ரா மஞ்ஜுளன்
எழுதும் புதிய
தொடர்கதை
அறிவிப்பு!

ரூ.50 பரிசு:
வாசகர் போட்டி!

படிக்கத்
தவறாதீர்கள்!

ராணி காமிக்ஸ்

1.1.86 - ல் வெளிவருகிறது!

PRINTED AT RANI PRINTERS, MADRAS-7

Scanned by CamScanner